RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை மலர்-5 இதழ்- 210 ஆகஸ்டு.5 2026 புதன்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

# “தவெகவின் பாசிச தன்மைக்கு விழுந்த அடி...” திமுக தலைவர் மு.க.ஸ்டாலின்

சென்னை: ஆக.5-

“உதயநிதியை இன்றே விடுதலை செய்ய வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றம் வழங்கி இருக்கும் உத்தரவு, தவெகவின் பாசிசத் தன்மைக்கு விழுந்த அடி” என்று திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “காவிரியில் தமிழகத்துக்கான உரிமையை நிலைநாட்ட துப்பு இல்லாத, மேகேதாட்டு அணையைத் தடுக்க முதுகெலும்பு இல்லாத தவெக அரசின் அலட்சிய ஆணவப் போக்கைக் கண்டித்து தஞ்சையில் திமுக சார்பில் நடத்தப்பட்ட கண்டன ஆர்ப்பாட்டத்தின் எழுச்சி ஒட்டுமொத்த தமிழகத்தின் கொந்தளிப்பை உணர்த்துவதாக அமைந்திருந்தது.

திமுக உறுப்பினர்களோடு விவசாயிகளும் பொது மக்களும் பங்கெடுத்து தங்களது உணர்ச்சியை வெளிப்படுத்தினர். கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி, தவெக அரசின் கையாலாகாத்தனத்தை மிகக் கடுமையாக அம்பலப்படுத்தி விமர்சித்தார்.

"நிர்வாகத் திறனற்ற டம்மி முதல்வரால் காவிரி நீரைக் கொண்டுவர முடியவுமில்லை, மேகேதாட்டு அணையைத் தடுக்க பேசவும் முடியவில்லை, விவசாயிகள் வேதனையில் கண்ணீர் வடித்துக் கொண்டு இருக்கிறார்கள், ஆனால் அமைச்சர்களோ முதல்வர் நடித்த படத்தை பார்த்து கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்கள், ஜோக்கர் அமைச்சரவை தமிழகத்தில் அமைந்திருக்கிறது" என்று அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை எதிர்க்கட்சித் தலைவர் வைத்தார். இதற்கு இதுவரை ஆட்சியாளர்களால் பதில் சொல்ல முடியவில்லை.

காவிரி பிரச்னையில் அரசின் தோல்வி வெளிச்சத்துக்கு வந்துவிட்டதை மறைக்கும் வகையில், பிரச்சினையையே திசை திருப்பும் வகையில் இன்று காலையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி வீட்டுக்கு வந்த போலீஸ் படை அவரை அராஜகமாக கைது செய்துள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் என்பதைப் பற்றி எல்லாம் கவலைப்படாமல் அவரைக் கைது செய்து தஞ்சாவூருக்கு அழைத்துச் சென்றுள்ளது தவெக அரசு. பல்வேறு பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்திருப்பதன் மூலமாக உதயநிதியை மிரட்டப் பார்க்கிறார்கள்.



நாளை சட்டமன்றம் கூட இருக்கிறது. நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்ய இருக்கிறார்கள். அப்போது கேபினெட் தகுதி பெற்ற எதிர்க்கட்சித் தலைவர் அவையில் இருக்க வேண்டும். ஆனால், அவர் அவையில் இருக்கக் கூடாது என்று நினைத்து இந்த நடவடிக்கையைத் தொடங்கி இருக்கிறார்கள்.

நாடு முழுவதும் திமுக தொண்டர்களும், பொதுமக்களும் காட்டிய எதிர்ப்புக்குப் பிறகு, 'கைது செய்யும் எண்ணம் இல்லை, விசாரணை முடிந்ததும் விடுவித்துவிடுவோம்' என்று நீதிமன்றத்தில் தவெக அரசு வழக்கறிஞர் சொல்லி இருக்கிறார்.

விசாரணை நடத்துவதுதான் நோக்கம் என்றால் சென்னையிலேயே வைத்து நடத்தி இருக்கலாமே? எதற்காக தஞ்சாவூர் அழைத்துச் செல்ல வேண்டும்? எதற்கு ஜாமீனில் விடுவிக்க முடியாத பல்வேறு பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்ய வேண்டும்? மக்கள் எதிர்ப்பால் பின் வாங்கியது தெரியாமல் பூசி மெழுகுகிறது அரசு.

'உதயநிதியை இன்றே விடுதலை செய்ய வேண்டும்' என்று சென்னை உயர் நீதிமன்றம் வழங்கி இருக்கும் உத்தரவு, தவெகவின் பாசிசத் தன்மைக்கு விழுந்த அடி.

ஆட்சிக்கு வந்தது முதல் தன்னையும் தனது அமைச்சர்களையும், ஆட்சியையும் விமர்சிப்பவர்களைக் கைது செய்யும் ஒரே வேலையைத் தான் முதல்வர் விஜய் பார்த்து வருகிறார். ட்வீட் போட்டால், வீடியோ பேசினால் கைது செய்து வருகிறார்கள்.

சட்டமன்ற உறுப்பினர்கள் அனிதா ராதாகிருஷ்ணன், மார்க்கண்டேயன் ஆகியோர் மீதும் கைது நடவடிக்கை பாய்ந்தது. நீட் தேர்வுக்கு எதிராக மாணவர்கள், இளைஞர்களைப் போராட விடவில்லை. போராட்டம் நடத்தியவர்கள் மீது அராஜகமான தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன. சென்னை மெரினா கடற்கரையே பூட்டி வைக்கப்பட்டது பாசிசத்தின் உச்சம்.

விவசாயிகள் தன்னெழுச்சியாகப் போராடியதை எதிர்க்கட்சிகளின் தூண்டுதலின் பேரில் போரடியதாகச் சொல்லப்பட்டது. நீட் தேர்வு எதிர்ப்பு பரப்புரை செய்யச் சென்ற திராவிடர் கழக வாகனப் பேரணிக்கு அனுமதி மறுக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாகத் தான் விவசாயிகளுக்காக ஆர்ப்பாட்டம் நடத்திய, அதில் பங்கெடுத்துப் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி மீது கைது நடவடிக்கையைப் பாய்ச்சியது தவெக அரசு.

இதனைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டுள்ள அரசியல் கட்சித் தலைவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால், சில தலைவர்கள், உண்மை என்னவென்று தெரிந்து கொள்ளாமல் உதயநிதிக்குக் கண்டனம் தெரிவித்திருப்பது வருந்தத்தக்கது. உதயநிதி தனது உரையில் ஆபாசமாக ஏதும் பேசவில்லை. யாரையும் குறிப்பிடவில்லை. அவர் பேசாத ஒன்றை பேசியதாகச் சிலர் பரப்பியதைச் சரி பார்க்காமல் அரசியல் தலைவர்கள் சிலர் உதயநிதியைக் கண்டிப்பது பிரச்சினையை திசை திருப்புவது ஆகும். உதயநிதி தவறுதலாகப் பேசுகிறவர் அல்ல. அப்படியே தவறுதலாகப் பேசினாலும், உடனடியாக மன்னிப்பு கேட்கும் இயல்புடையவர்.

ஆட்சிக்கு வந்தது முதல் வாக்குறுதிகளை நிறைவேற்ற நினைக்காமல், ரீல்ஸ் கிரியேட்டராக மட்டுமே வலம் வரும் முதல்வர் விஜய், தனது பொறுப்பை உணர்ந்து இனியாவது செயல்பட வேண்டும். தமிழகம் முழுவதும் போராட்டத்தில் ஈடுபட்டதற்காகக் கைது செய்துள்ள திமுக தொண்டர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும். ஆணவம், அழிவுக்கு வழிவகுக்கும்; தொடர்ச்சியான ஆணவம், அழிவை விரைவுபடுத்தும்!” என்று மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

## மேகேதாட்டு அணை விவகாரம்

# கர்நாடகாவின் புதிய திட்ட அறிக்கை இன்னும் வந்து சேரவில்லை

## கமல்ஹாசன் கேள்விக்கு மத்திய அரசு பதில்

சென்னை, ஆக.05-

“மேகதாட்டு அணை குறித்து கர்நாடக அரசின் திருத்தப்பட்ட புதிய திட்ட அறிக்கை இதுவரை மத்திய நீர் ஆணையத்துக்கு வந்து சேரவில்லை” என்று மநீம தலைவர் கமலஹாசன் நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு மத்திய அரசு பதில் அளித்துள்ளது.



மாநிலங்களவையில் மக்கள் நீதி மய்யம் தலைவரும், எம்.பி.யுமான கமல்ஹாசன், “மேகேதாட்டு திட்டத்துக்காக திருத்தப்பட்ட திட்ட அறிக்கையை கர்நாடக அரசு சமர்ப்பித்துள்ளதா? இத்திட்டத்தால் தமிழகத்தின் பாசன வசதி மற்றும் குடிநீர் தேவைகளுக்கு பாதிப்பு ஏற்படுமா என ஆய்வு செய்யப்பட்டுள்ளதா?” என கேள்விகளை எழுப்பியிருந்தார்.

இக்கேள்விகளுக்கு மத்திய ஜல் சக்தித் துறை இணையமைச்சர் ராஜ் பூஷன் சௌத்ரி அளித்துள்ள பதிலில் கூறியிருப்பதாவது: கர்நாடக அரசு 2019ஆம் ஆண்டு சமர்ப்பித்த மேகதாட்டு அணை மற்றும் குடிநீர்த் திட்டத்தின் விரிவான திட்ட அறிக்கை ஏற்கனவே திருப்பி அனுப்பப்பட்டுவிட்டது.

காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பு மற்றும் மத்திய நீர் ஆணையத்தின் வழிகாட்டுதல்களுக்கு உட்பட்டு திருத்தப்பட்ட புதிய திட்ட அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு கர்நாடக அரசிடம் கேட்கப்பட்டுள்ளது.

இதுவரை அத்தகைய திருத்தப்பட்ட புதிய திட்ட அறிக்கை எதுவும் மத்திய நீர் ஆணையத்திற்கு வந்து சேரவில்லை. காவிரிப் படுகையில் அமையும் நீர் திட்டங்களுக்கான திட்ட அறிக்கைகளை மத்திய நீர் ஆணையம் பரிசீலிக்கும் போது, மத்திய நீர் ஆணையத்தின் நடைமுறை வழிகாட்டுதல்கள், காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு மற்றும் 2018 பிப்ரவரி 16 அன்று உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு ஆகியவற்றின் அடிப்படையில் மட்டுமே ஆய்வு மற்றும் மதிப்பீடு செய்யப்படும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். இதேபோல், மின்துறை தொடர்பாக மற்றொரு கேள்வியும் எழுப்பியிருந்தார்.

இக்கேள்விகளுக்கு மத்திய மின்சாரம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை இணையமைச்சர் ஸ்ரீபத் நாயக் அளித்த பதில்: கடந்த 5 ஆண்டுகளில் தமிழகத்தின் உச்சகட்ட மின் தேவைகள் அனைத்தும் 100 சதவீதம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

தமிழகத்தில் மின் பற்றாக்குறை 0 சதவீதமாக உள்ளது. தமிழகத்தில் துணை மின்நிலையங்களைப் புதுப்பிக்கவும், பேட்டரி சேமிப்பு அமைப்புகளை அமைக்கவும் ரூ.785.21 கோடி மானியத்தில் 10 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

ஸ்மார்ட் மீட்டர் பொருத்த ரூ.9,235 கோடியும், மின் விநியோகக் கட்டமைப்பைச் சீரமைக்க ரூ.9,568 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது. மாநிலங்களுக்கு இடையேயான மின் இணைப்பு திட்டத்தின் கீழ் 8.38 கிகாவாட் புதுப்பிக்கத்தக்க ஆற்றலை இணைக்க திட்டமிடப்பட்டு, அதில் 2.38 கிகாவாட் திட்டங்கள் தமிழகத்தில் ஏற்கெனவே செயல்பாட்டுக்கு வந்துள்ளன என்றார்.

present sale for all over Tamil Nadu

தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது

# நீட் தேர்வை ரத்து செய்ய கோரி ஜே.பி.நட்டாவிடம் அமைச்சர் அருண் ராஜ் நேரில் வலியுறுத்தல்

சென்னை, ஆக.05-

நீட் தேர்வை ரத்து செய்து, தகுதித் தேர்வு மதிப்பெண்கள் அடிப்படையில் மாணவர் சேர்க்கையை தமிழ்நாடு அரசு நடத்துவதற்கு உரிமை வழங்க வேண்டும் என்று மத்திய அமைச்சர் ஜே.பி. நட்டாவிடம், தமிழ்நாடு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அருண் ராஜ் நேரில் வலியுறுத்தியுள்ளார்.




புதுடெல்லியில் மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் ஜே.பி. நட்டாவை நேற்று (ஆகஸ்ட் 03) தமிழ்நாடு மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அருண் ராஜ் நேரில் சந்தித்து தமிழ்நாட்டில் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்கள் குறித்த கோரிக்கை மனுவை அளித்தார்.

இந்த நிகழ்வின் போது மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை செயலாளர் புன்யா சலிலா ஸ்ரீவஸ்தவா, தமிழ்நாடு தேசிய நல வாழ்வு குழும இயக்குநர் அனீஷ் சேகர் ஆகியோர் உடன் இருந்தனர். இதையடுத்து, அமைச்சர் அருண் ராஜ், மத்திய அமைச்சர் ஜே.பி.நட்டாவிடம் வழங்கிய மனுவில், "கூட்டாட்சித் தத்துவத்தின் அடிப்படையில், தமிழ்நாட்டின் கோரிக்கைகளை விரைவாகவும், சாதகமாகவும் பரிசீலிக்க வேண்டும்.

தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வான நீர் தேர்வை ரத்து செய்து, தகுதித் தேர்வு மதிப்பெண்கள் அடிப்படையில் மாணவர் சேர்க்கையை தமிழ்நாடு அரசு நடத்துவதற்கான உரிமையை மத்திய அரசு வழங்க வேண்டும்.

மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையை விரைவாகச் செயல்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும். கோயம்புத்தூரில் 2 வது எய்ம்ஸ் மருத்துவமனையை அமைக்க வேண்டும். 653 முதுகலை மருத்துவ இடங்களுக்கான மத்திய நிதியுதவியை விரைவாக அளிப்பதுடன், பணியில் உள்ளவர்களுக்கான இடஒதுக்கீட்டைப் பாதுகாக்கும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டில் உள்ள தனியார் மருத்துவக் கல்லூரிகளை நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களாக மாற்றுவதற்கு தற்காலிகத் தடை விதிக்க வேண்டும். தமிழ்நாட்டில் அரசு சார்பில் ஆறு புதிய அரசு செவிலியர் கல்லூரிகளை தொடங்க ஒப்புதல் அளிக்க வேண்டும்.

மேலும், தமிழ்நாட்டின் சுகாதாரத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில், தேசிய சுகாதார இயக்கத்தின் திட்டங்களை செயல்படுத்துவதற்கான நிதியை விரைவில் ஒதுக்கீடு செய்ய வேண்டும். மத்திய அரசின் சுகாதாரத் திட்டங்களை ஒருங்கிணைத்து, செயல்பாட்டு நிதி விதிமுறைகளை மாற்றியமைத்தல் மூலம் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்வதுடன், திட்டங்களை செயல்படுத்துவதற்கு அனுமதி வழங்க வேண்டும்.

சென்னையில் செயல்பட்டு வரும் தேசிய முதியோர் நலமையத்திற்கு நிதி உதவி வழங்குவதுடன், சேலம் மற்றும் மதுரையில் மண்டல முதியோர் நல மையங்களை அமைக்கவும், தீவிர சிகிச்சைக் கட்டமைப்பு வசதிகளைத் தொடர்ந்து வலுப்படுத்தவும் வேண்டும்" என்று அமைச்சர் அருண் ராஜ் கொடுத்த மனுவில் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளன.

# மதுரை மீனாட்சி அம்மன் கோயில் அறக்கட்டளை நிலம் அபகரிப்பு விவகாரம்: இருவர் கைது

மதுரை, ஆக.05-

மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் உலக பிரசித்தி பெற்ற வழிபாட்டு தலங்களில் ஒன்றாகும். இந்த கோயிலுக்கு நாள்தோறும் ஏராளமான பக்தர்கள் வருகை தந்து சாமி தரிசனம் செய்கிறார்கள். இந்நிலையில், இந்த கோயிலுக்கு சொந்தமான ரூ.60 கோடி மதிப்பிலான நிலத்தை போலி ஆவணங்கள் மூலம் தனியாருக்கு விற்பனை செய்ததாக புகார்கள் எழுந்தன.

இதனைத் தொடர்ந்து, மீனாட்சி அம்மன் கோயிலின் இணை ஆணையர் மற்றும் செயல் அலுவலர் செல்லதுரை அளித்த புகாரின் அடிப்படையில், இந்தியத் தண்டனை சட்டத்தின் 420 (மோசடி) மற்றும் 120(B) (குற்றச்சதி) ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து, இந்த நிலத்தை முறைகேடாக ஆக்கிரமித்து இருப்பதாக முன்னாள் வட்டாட்சியர் அன்பழகன், முன்னாள் கிராம நிர்வாக அலுவலர் அரசன், சார் பதிவாளர் பிரகாஷ், அனந்தராமன் ஆகியோர் மீது மதுரை மத்திய குற்றப்பிரிவு காவல்துறையினர் வழக்கு பதிவு செய்தனர்.

மேலும், இந்த நிலங்களை பட்டா மாற்றிய ராமாயி ஆயியார், செந்தமிழ்ச்செல்வி உட்பட 19 பேர் மீது மீனாட்சி கோயில் செயல் அலுவலர் செல்லத்துரை அளித்த புகாரின் பேரில் வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

இந்நிலையில், போலி ஆவணங்களை தாக்கல் செய்து பட்டா பெற்றதாக புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடியைச் சேர்ந்த ராஜ்குமார் (வயது 40) என்பவரை ஆகஸ்ட் 2ஆம் தேதி காவல் துறையினர் கைது செய்தனர். இதனைத் தொடர்ந்து, ரூ.60 கோடி மதிப்பிலான நிலம் அபகரிப்பு வழக்கில் முக்கிய குற்றவாளியான இளையராஜா (வயது 52) என்பவரை நேற்று (ஆகஸ்ட் 03) பெங்களூருவில் கைது செய்தனர்.

அவரிடம் மேற் கொள்ளப் பட்ட விசாரணையில், மதுரை மாவட்டம் உசிலம் பட்டியை சேர்ந்த இளையராஜா அரசியல்வாதிகளின் ஆதரவோடு பல கோடி ரூபாய் மதிப்புள்ள இடங்களை மிகக் குறைந்த தொகையில், அவர்களின் பெயரிலேயே பட்டா பதிந்து, பிறகு பதியப்பட்ட நிலங்களை அவர்களிடமிருந்து பவர் பத்திரம் மூலம் வாங்கி விற்று வந்தது தெரிய வந்தது.

தொடர்ந்து, மீனாட்சி கோயில் அறக்கட்டளை நில மோசடி விவகாரம் தொடர்பாக மத்திய குற்றப்பிரிவு காவல்துறையினர் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



# நீலகிரி மாவட்டஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

நீலகிரி, ஆக.5-

நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், நடைபெற்ற மக்கள் மாவட்ட குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 126 மனுக்களை பெற்றுக் கொண்டார். ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை நடைபெறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.மேலும், நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட வழங்கல் அலுவலகத்தின் சார்பில், 1 பயனாளிக்கு புதிய மின்னணு குடும்ப அட்டையினை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் வாசுகி, மகளிர் திட்ட அலுவலர் ரூபன் சங்கர் ராஜ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) லோகநாயகி, மாவட்ட வழங்கல் அலுவலர் சரவணன், உதவி ஆணையர் (கலால்) மாதேஸ்வரன் உட்பட பல்வேறு அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.




# தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில்மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தலைமையில் நடைபெற்றது

தேனி, ஆக.5-

இக்கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, புதிய வீட்டுமனைப் பட்டா, வேலைவாய்ப்பு மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 261 கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் , பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை சம்பந்தப்பட்டத்துறை அலுவலர்களிடம் வழங்கி மனுக்கள் மீது குறித்த காலத்திற்குள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.முன்னதாக,மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டார். தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பாக 8 வகையான காய்கறி விதைகள் அடங்கிய ஆடிப்பட்ட காய்கறிகள் விதைத் தொகுப்புகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் 3 பயனாளிகளுக்கு வழங்கினார்.மேலும், தேனி மாவட்டத்தின் அனைத்து வட்டாரங்களிலும் இதே போன்று காய்கறி விதைத் தொகுப்புகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. எனவே காய்கறி விதைத் தொகுப்புகள் தேவைப்படும் பயனாளிகள் ரூபாய் 20/ தொகுப்பு வீதம் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தெரிவித்தார்.இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர்.ப.ராஜகுமார், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை).துஷார் ஸ்ரீஹர் ஷிண்டே, ., திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்).வீராச்சாமி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது).இராமகிருஷ்ணன், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி.).கவிதா, கூடுதல் காவல் கண்காணிப்பாளர் மகேஷ், மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்).கதிர்வேல், மாவட்ட வழங்கல் அலுவலர் .நல்லையா உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



# குன்னூர் நகர திமுக சார்பில் மறியல் மற்றும் போராட்டம் நூற்றுக்கணக்கான திமுகவினர் கைது

நீலகிரி, ஆக.5-

குன்னூர் திமுக இளைஞரணி செயலாளரும் தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலினை தற்போது ஆளக்கூடி த. வெ. க அரசு கைது செய்ததை முன்னிட்டு நடுங்கும் திமுகவினர் எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம் மறியல் செய்து வருகின்றனர். குன்னூர் நகர திமுக சார்பில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினின் கைதை கண்டித்து நகர திமுக அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்று. திமுக அலுவலகத்தில் இருந்து குன்னூர் நகர செயலாளர் ராமசாமி தலைமையில் திமுகவினர் ஊர்வலமாக கோஷங்கள் எழுப்பி எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினை கைது செய்வதை கண்டித்து ஊர்வலமாக வந்து பேருந்து நிலைய பகுதியில் மறியலில் ஈடுபட்டனர். இந்த மறியலில் திமுக உயிர்மட்ட செயல்திட்ட குழு உறுப்பினர் பா.மு.முபாரக்.மாநில திமுக சிறுபான்மை பிரிவு துணை செயலாளர் அன்வர் கான். மாநில விளையாட்டு மேம்பாட்டு அணியின் துணைச் செயலாளர் வாசிம் ராஜா. குன்னூர் ஒன்றிய செயலாளர் பிரேம்குமார். வெலிங்டன் நகரிய செயலாளர் மாட்டின். பேரூராட்சி கழக செயலாளர் சஞ்சீவ். உலிக்கல் பேரூராட்சி செயலாளர் ரமேஷ். குன்னூர் நகர மன்ற தலைவர் சுசீலா. மாவட்ட துணை செயலாளர் லட்சுமி. உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட திமுகவினர் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினின் கைதை கண்டித்து மறிலில் ஈடுபட்டனர். காவல்துறையினர் திமுகவினரே கைது செய்தனர்.

# திருப்பத்தூர் அரசு என்ன தலைமை மருத்துவமனையில் அவசர சிகிச்சை மற்றும் மீட்பு மையம் திறப்பு விழா

திருப்பத்தூர், ஆக.5-

திருப்பத்தூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அவசர சிகிச்சை மற்றும் மீட்பு மையம் (Emergency Care and Recovery Centre – ECRC) திறப்பு விழா இன்று (04.08.2026) காலை சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் கு.ரவிக்குமார், I.A.S., திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் நா.திருப்பதி, B.V.Sc., மாவட்ட இணை இயக்குனர் ஞானம் மீனாட்சி, தலைமை மருத்துவ அலுவலர் சிவகுமார், மருத்துவர்கள், செவிலியர்கள், அரசு அலுவலர்கள், The Banyan, BALM உள்ளிட்ட சமூக நல அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.மனநலப் பாதிப்புக்குள்ளானோர், ஆதரவற்றோர் மற்றும் அவசரகால பாதுகாப்பு தேவைப்படும் நபர்களுக்கு உடனடி பராமரிப்பு, பாதுகாப்பான தங்குமிடம், மருத்துவச் சிகிச்சை, உளவியல் ஆலோசனை, மீட்பு மற்றும் மறுவாழ்வு சேவைகளை ஒருங்கிணைந்த முறையில் வழங்கும் நோக்கத்துடன் இந்த மையம் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசின் தேசிய சுகாதார இயக்கம் (National Health Mission), The Banyan, BALM, Azim Premji Philanthropic Initiatives ஆகிய அமைப்புகளின் ஒருங்கிணைப்பில் செயல்படும் இந்த மையம், திருப்பத்தூர் மாவட்டத்தில் மனநல சேவைகளை வலுப்படுத்துவதோடு, ஆதரவற்றோருக்கான மனிதநேயப் பராமரிப்பில் புதிய முன்னுதாரணமாக அமையும்.

இந்த மக்கள்நலத் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்த முனைப்புடன் பணியாற்றிய மாவட்ட நிர்வாகம், சுகாதாரத் துறை, மருத்துவர்கள், தன்னார்வ அமைப்புகள் மற்றும் அனைத்து அலுவலர்களுக்கும் மனமார்ந்த பாராட்டுகளையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.





# எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் கைது நடவடிக்கையை எதிர்த்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

தாம்பரம், ஆக்.5-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் கைது நடவடிக்கையை எதிர்த்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் தாம்பரம் பேருந்து நிலையம் அம்பேத்கர் சிலை அருகில் தாம்பரம் மாநகர செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ் ஆர் ராஜா எம்,எல்,ஏ அவர்கள் தலைமையில் நடைபெற்றது இதில் தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி மண்டல குழு தலைவர்கள் பகுதி கழக செயலாளர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன், செம்பாக்கம் பகுதி செயலாளர் சுரேஷ் மாமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.கோபி, சி.சுரேஷ், எல்.பெரியநாயகம், ரமணி ஆதிமூலம் கழக பேச்சாளர்கள் எஸ்.டி.கருணாகர பாண்டியன், கி.வேலுமணி, வட்ட செயலாளர்கள், பகுதி நிர்வாகிகள் மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆகியோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்



# நடை ரோந்து (Foot Patrolling) மூலம் குற்றங்கள் நடைபெறா வண்ணம் கண்காணிக்கும்

தேனி, ஆக.5-

தேனி மாவட்ட காவல்துறையினர். பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்கிலும் தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் K.S.பிரவீன் கௌதம், உத்தரவின் பேரில், தேனி மாவட்ட காவல்துறையினர் தீவிர நடை ரோந்து (Foot Patrolling) பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மக்கள் அதிகம் கூடும் இடங்கள், வணிக வளாகங்கள், பேருந்து நிலையங்கள், குடியிருப்பு பகுதிகள் மற்றும் முக்கிய சாலைகளில் காவல்துறையினர் தொடர்ந்து கண்காணிப்பு மேற்கொண்டு வருகின்றனர். இந்த நடை ரோந்து பணியின் மூலம் திருட்டு, வழிப்பறி, சமூக விரோத செயல்கள் உள்ளிட்ட குற்றங்களை முன்கூட்டியே தடுத்து, சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.




# தவெக எம்எல்ஏவிடம் குதிரை பேரம்; ஒட்டுமொத்த வழக்கு விசாரணைக்கும் தடை

## சென்னை உயர் நீதிமன்றம் அதிரடி உத்தரவு

சென்னை, ஆக.5-

குதிரை பேர வழக்கை சிபிஐக்கு மாற்றக் கோரிய வழக்கில் ஒட்டுமொத்த விசாரணைக்கும் சென்னை உயர்நீதிமன்றம் தடைவிதித்துள்ளது. குதிரை பேரம் நடத்தியதாக ஊத்தங்கரை தவெக எம் எல் ஏ இளையராஜா அளித்த புகாரின் அடிப்படையில் சென்னை திருவல்லிக்கேணி போலீசார் பதிவு செய்த வழக்கில் இதுவரை 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ரமேஷ், கார்த்திக் ஆகியோருக்கு சென்னை உயர்நீதிமன்றம் ஜாமீன் வழங்கி உத்தரவிட்டிருந்தது. இந்த நிலையில் இந்த வழக்கை மாநில போலீசார் விசாரித்தால் நியாயம் கிடைக்காது என கூறி விசாரணையை சிபிஐக்கு மாற்ற வேண்டும் என ரமேஷ் தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.ஏ. தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அடங்கிய அமர்வில் ஏற்கனவே விசாரணைக்கு வந்தபோது நீதிபதிகள் மனுதாரர் ரமேஷுக்கு எதிரான வழக்கின் விசாரணைக்கு இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டிருந்தனர்.

இந்தநிலையில் வழக்கு இன்று மீண்டும் தலைமை நீதிபதி அமர்வில் விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் சார்பில் மூத்த வழக்கறிஞர்கள் பி.எஸ். ராமன்,விராகவாச்சாரி ஆகியோர் ஆஜராகி வாதிட்டனர். இதையடுத்து, ஒட்டுமொத்த வழக்கு விசாரணைக்கும் தடை விதித்து நீதிபதிகள் உத்தரவிட்டு வழக்கு விசாரணையை மற்ற வழக்குகளோடு சேர்த்து ஒத்திவைத்தனர். இனி இந்த வழக்கு சிபிஐ விசாரணைக்கு உத்தரவிடப்படும் வழக்கோடு சேர்த்து விசாரிக்கப்படும்.

# முல்லைப்பெரியாறு கால்வாயில் உடைப்பு!குடிநீரில் மழைநீர் கலக்கும் அபாயம்

முல்லை, ஆக.5-

முல்லைப்பெரியாறு அணையிலிருந்து தமிழகத்திற்கு தண்ணீர் கொண்டு செல்லும் தேக்கடி தலைமதகு பகுதி கால்வாயின் கரையில் உடைப்பு ஏற்பட்டுள்ளது. இதனால், கழிவுகளுடன் கலந்த மழைநீர் குடிநீரில் கலந்து வருகிறது.ஓடையில் அடித்துவரப்பட்ட குப்பைகள் தேங்கியதால் நீரோட்டம் தடைபட்டு இந்த உடைப்பு ஏற்பட்டுள்ளதாகவும், மழை குறைந்த பிறகு சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் நீர்வளத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# பழனியில் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் உதயநிதி ஸ்டாலினை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஏராளமான தவெக தொண்டர்கள் பங்கேற்றனர்

பழனி, ஆக.5-

காவிரி விவகாரம் தொடர்பாக திமுக சார்பில் தஞ்சையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் திமுக இளைஞரணி செயலாளரும் எதிர்க்கட்சி தலைவருமான உதயநிதி ஸ்டாலின் பங்கேற்று உரையாற்றினார். அப்போது தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய் குறித்து அவதூறாக பேசியதால் பரபரப்பு ஏற்பட்டது. உதயநிதி ஸாடாலினின் பேச்சுக்கு பல்வேறு அரசியல் கட்சி தலைவர்களும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில் உதயநிதி ஸ்டாலின் பேச்சை கண்டித்து பழனியில் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தவெக நகர செயலாளர் மிதுன் தலைமையில் பழனி பேருந்து நிலையம் அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் திண்டுக்கல் மேற்கு மாவட்ட செயலாளர் கார்த்திக்ராஜா கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார். ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட செயற்குழு உறுப்பினர் பாலன், மாவட்ட துணை செயலாளர் நாகராஜ் மற்றும் ஏராளமான பெண்கள் உள்பட முன்னூற்றுக்கும் மேற்பட்ட தொண்டர்கள் பங்கேற்று உதயநிதி ஸ்டாலினை கண்டித்து கோஷம் எழுப்பினர். தொடர்ந்து உதயநிதி உருவப்படத்தை தவெகவினர் செருப்பால் அடித்து கண்டனம் தெரிவித்தனர். இதையடுத்து உடனடியாக போலீசார் உதயநிதி படத்தை கைப்பற்றி எடுத்து சென்றனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.



மாலை தந்தி

புதன்கிழமை 05.08.2026



■ கன்னியாகுமரி மாவட்டம் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனையில் புதிதாக கட்டப்பட்டுள்ள புற்றுநோய் கதிரியக்க சிகிச்சை மையத்தை சுற்றுலாத்துறை அமைச்சர் .ராஜேஷ் குமார். மாவட்ட ஆட்சியர் பிரதாப் முன்னிலையில் திறந்து வைத்தார்..நிகழ்ச்சியில் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் மேரி பிரின்ஸி லதா. ஆணையர் மரியாதைக்குரிய ஐஸ்வர்யா ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்



# தெப்பதேரின் கோபுரம் மரக்கலையில் மோதிக்கொண்டதால் கீழே சாய்ந்தது பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது

ஜோலார்பேட்டை, ஆக.5-

திருப்பத்தூர் மாவட்டம் மண்டலவாடி பகுதியில் சிவன் ஆலயத்தில் முருகன் ஆலயம் அமைந்துள்ளது இவ்வாலயத்தில் ஆடிப்பெருக்கு விழாவை முன்னிட்டு தெப்பக்குளத்தில் தேர் ஊர்வலம் நடைபெறுவது வழக்கம் போல் தெப்பத்தேர் 3 சுற்றுகள் தெப்பக்குளத்தில் வளம் வரும் பொழுது மூன்றாவது சுற்றில் மரக்கிளையில் மாட்டிக் கொண்டது இதனால் தெப்பக்குளத்தின் தெப்பதேர் கோபுர பகுதி மரக்கிளையில் மாட்டிக்கொண்டதால் தேரின்கூம்பு (கோபுர பகுதி)சாய்ந்து விட்டது இதனால் தெப்பத்தியருக்கு அடியில் இருந்த பக்தர்கள் பெரும் விபத்திலிரந்து தப்பித்தன பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப் பட்டதுமறக்கலையில் தெப்பத்தேர் மாட்டிக்கொண்ட கோபுரம் மாட்டிக் கொண்ட சம்பவம் அப்பகுதியில் பக்தர்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியது.



■ மதுரை கிழக்கு வட்டம், கள்ளந்திரி ஊராட்சிமன்ற அலுவலகத்தில் மதுரை கிழக்கு ஊராட்சியில் ஒன்றிய பகுதிகளில் ஊரக வளர்ச்சி மற்றுட் ஊராட்சித்துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உள்ளிட்ட துறை அலுவலர்களுடன் குடிநீர் வழங்கல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா தலைமையில் நடைபெற்றது.



■ மதுரை கிழக்கு வட்டம், மீனாட்சிபுரம் ஊராட்சியில் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூபாய்.70.19 லட்சம் மதிப்பீட்டில் மீனாட்சிபுரம் கிராமம் முதல் பொன்னகரம் கிராமம் வரை அமைக்கப்பட்டு வரும் புதிய தார் சாலை பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா ஆய்வு செய்து பார்வையிட்டார்.





# தமிழ்நாடு முழுவதும் திமுகவினர் போராட்டம்

சென்னை, ஆக.5-

உதயநிதி ஸ்டாலின் கைதை கண்டித்து திமுகவினர் தமிழ்நாடு முழுவதும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். திருச்சி, நாகை, விழுப்புரம், புதுக்கோட்டை உள்ளிட்ட மாவட்டங்களில் திமுகவினர் சாலை மறியலில் ஈடுபட்டுள்ளனர். உதயநிதி கைதுசெய்யப்பட்டதை கண்டித்து தமிழ்நாடு முழுவதும் போராட்டம் வெடித்தது

# திருப்பூர் மாவட்டம். தமிழக முதல்வர் விஜய் காணொளி வாயிலாக நொய்யல் பாலம் திறக்கப்பட்டது

திருப்பூர், ஆக.5-

திருப்பூர் மாவட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் .ச.ஜோசப் விஜய் சென்னை, தலைமை செயலகத்திலிருந்து காணொளிக்காட்சி வாயிலாக நேற்று (04.08.2026) திருப்பூர் மாநகராட்சி, ஈஸ்வரன் கோயில் சாலையில் ஸ்ரீசக்தி தியேட்டர் சாலை மற்றும் யூனியன் மில் சாலையை இணைக்கும் வகையில் நொய்யல் ஆற்றின் குறுக்கே உட்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு நிதி கீழ் ரூ.18.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர்மட்டப் பாலத்தினை திறந்து வைத்த நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் டாக்டர். மனிஷ் நாரணவரே சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.பாலமுருகன் (திருப்பூர் தெற்கு), வி.சத்யபாமா (திருப்பூர் வடக்கு), ராம்குமார் (பல்லடம்), துணை மேயர்



.ரா.பாலசுப்பிரமணியம், மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித் ஆகியோர் பங்கேற்றார்கள். திருப்பூர் மாநகராட்சி, மண்டலம் எண்.03ல், வார்டு எண்.44க்குட்பட்ட ஈஸ்வரன் கோயில் சாலையில் ஸ்ரீசக்தி தியேட்டர் சாலை மற்றும் யூனியன் மில் சாலையை இணைக்கும் வகையில் நொய்யல் ஆற்றின் குறுக்கே உட்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு நிதி கீழ் ரூ.18.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர்மட்டப்பாலத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ச.ஜோசப் விஜய் அவர்கள் சென்னை, தலைமை செயலகத்திலிருந்து காணொளிக்காட்சி வாயிலாக திறந்து வைத்தார்கள்.இப்பாலம் 110.00 மீட்டர் நீளம் மற்றும் 20.54 மீட்டர் அகலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இரண்டுபுறமும் 14 தூண்கள் மற்றும் 9 கன்வாய்கள் உள்ளது. நொய்யல் ஆற்றின் கரையின் இருபுறமும் 120 மீட்டர் நீளத்தில் 4.00 மீட்டர் உயரத்தில் கட்டப்பட்டுள்ளது. பாலத்தின் மையத்தில் 14 எண்ணிக்கையிலான தெருவிளக்குள் பொருத்தப்பட்டுள்ளது. இப்பாலம் திறக்கப்பட்டதன் மூலம் திருப்பூர் வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளுக்கு இடையேயான பயண நேரம் குறையும். நகரின் முக்கிய சாலைகளில் போக்குவரத்து நெரிசல் குறையும். பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள் மற்றும் அரசு அலுவலகங்களுக்கு எளிதாகச் செல்ல இயலும். தொழிற்சாலைகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு சரக்கு போக்குவரத்து விரைவாக நடைபெறும். அவசரகால சேவைகள் விரைவாகச் சென்றடைய உதவும். திருப்பூர் மாநகரின் முக்கியமான உள்கட்டமைப்பு முதலீடுகளில் ஒன்றாகும். இத்திட்டம் பாதுகாப்பான, வேகமான மற்றும் நிலையான போக்குவரத்து வசதியை உருவாக்குவதோடு, நகரின் பொருளாதார வளர்ச்சி, தொழில் முன்னேற்றம் மற்றும் பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் ஒரு முக்கிய மைல்கல்லாக அமைகிறது. இந்நிகழ்ச்சியில், தலைமைப்பொறியாளர் முகமது சபியுல்லா, துணை ஆணையர்கள் சுந்தர்ராஜன், செந்தில்குமார், உதவி ஆணையர் சரவணக்குமார், செயற்பொறியாளர்கள் ஹரி, ராம்மோகன், உதவி செயற்பொறியாளர் ஆறுமுகம், மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதி நிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




■ மதுரை மாநகராட்சி, மண்டலம் 4 தெற்கு அலுவலகத்தில் நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாமில் மேயர் (பொ) /துணை மேயர் நாகராஜன் , தெற்கு சட்டமன்ற உறுப்பினர் எம்.எம்.கோபிசன் ஆகியோர் சொத்துவரி பெயர் மாற்றம் வேண்டி விண்ணப்பித்த மனுதாரருக்கு உடனடியாக சொத்துவரி பெயர் மாற்றம் உத்தரவு ஆணையினை வழங்கினார்கள். அருகில் உதவி ஆணையாளர் மணிமாறன் உடன் உள்ளார்.




# செல்லூரில் கழிவுநீர் தேக்கம்: பெண்கள் உட்பட பொதுமக்கள் சாலை மறியல்

மதுரை, ஆக.5-

மதுரை செல்லூர் பகுதியில் பந்தல்குடி கால்வாய் புனரமைப்பு பணிகளால் கழிவுநீர் தெருக்களில் தேங்கி, குடிநீரில் கலந்து துர்நாற்றம் வீசுவதாக பொதுமக்கள் புகார் தெரிவித்தனர். பலமுறை மாநகராட்சியிடம் முறையிட்டும் நடவடிக்கை எடுக்காததால், பெண்கள் உட்பட பொதுமக்கள் கோரிப்பாளையம் பகுதியில் திடீர் சாலை மறியலில் ஈடுபட்டனர். இதனால் சுமார் ஒரு மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. பின்னர் அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து போராட்டம் கைவிடப்பட்டது.





# பாடியநல்லூர் அருள்மிகு ஸ்ரீ பவானி அம்மன் ஆலயத்தில் 29ம் ஆண்டு ஆடிதிருவிழா 9ம் ஆண்டு தீமிதி திருவிழா

மாதவரம், ஆக.5-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ பவானிஅம்மன் ஆலயத்தில் 29ம் ஆண்டு ஆடிதிருவிழா மற்றும் 9ம் ஆண்டு தீமிதி திருவிழா ஆலய நிர்வாகிகள் தலைவர் கோவிந்தசாமி, செயலாளர் ஆலயசாமி, பொருலாளர் தேவராஜ், துணைத்தலைவர்கள் பரசுராமன், ஆலயசாமி, முனுசாமி, பார்த்திபன் துணை செயலாளர்கள் ஆலயசாமி, திருமலை உள்ளிட்ட ஆலய அனைத்துநிலை நிர்வாகிகள் மற்றும் கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் கணபதி பூஜையுடன் பந்தகால் நடுதல், பால்குடம் எடுத்தல், காப்புகட்டுதல், பூங்கரகம் எடுத்தல், கங்கைநீர் திரட்டுதல், அக்னி கப்பறை எடுத்தல் போன்றவை நடைபெற்றது.பின்னர் சுமார் 200க்கும் மேற்பட்ட காப்புகட்டிய பக்தர்கள் தீகுண்டத்தில் இரங்கி தங்களின் நேர்த்திகடனை பூர்த்தி செய்தனர். இதனைத்தொடர்ந்து அம்மன் உற்சவர் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாள வானவேடிக்கைவுடன் திருவீதி உலா நடைபெற்றது. இத்திருவிழாவிற்கு ஆலய பொறுப்பாளர்கள், சுற்றுவட்டார பக்தர்கள் உள்ளிட்ட கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். மேலும் இத்திருவிழாவை முன்னிட்டு ஆலயம் மற்றும் உபயதாரர்கள் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினர்.முடிவில் அம்மனுக்கு சுமங்கலி பூஜை, கும்பம் படையல்பூஜை நடைபெற்றது.

# கன்னியாகுமரி மாவட்டம் தச்சமலை அரசு தொடக்கப்பள்ளி மாணவ மாணவியர்களுடன் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப்,கலந்துரையாடினார்

கன்னியாகுமரி, ஆக.5-

கன்னியாகுமரி மாவட்டம். திருவட்டார் வட்டத்துக்குட்பட்ட கல்லாடிமாமூடு மினிவிளையாட்டு அரங்கம், தச்சமலை அரசு தொடக்கப்பள்ளி ஆகியவற்றை மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் வட்டத்தில் உள்ள கல்லாடிமாமூடு பகுதியில், ரூ.3 கோடி மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்ட மினி அரங்கம் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்விளையாட்டு அரங்கம் வாயிலாக கல்லாடிமாமூடு மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களை சேர்ந்த இளைஞர்கள், பொதுமக்கள் மற்றும் விளையாட்டு வீரர்களின் பயன்பாட்டிற்காகத்





திறக்கப்பட்டு, தற்போது சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, நவீன வசதிகளுடன் கூடிய இந்த மினி அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் உடற்பயிற்சி செய்ய ஏதுவான பகுதிகள், பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கான வசதிகளும் உள்ளது.தொடர்ந்து விளையாட்டு மைதானத்தில் பொதுகழிப்பிடம், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், வேலி மற்றும் அரங்கத்திற்கு வரும் வழிகளில் தெருவிளக்குகள் அமைப்பது உள்ளிட்ட கோரிக்கைகளை இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் வைத்துள்ளனர். அவர்களின் கோரிக்கையின் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க மாவட்ட விளையாட்டு அலுவலருக்கு அறிவுறுத் தப்பட்டது.மேலும் திருவட்டார் ஊராட்சி ஒன்றியம். பேச்சிப்பாறை ஊராட்சிக்குட்பட்ட தச்சமலை அரசு தொடக்கப்பள்ளியினை நேரில் பார்வையிட்டு, மாணவர்களுடன் கலந்துரையாடப்பட்டது. மாணவர்களுக்கு தயார் செய்யப்பட்ட மதிய உணவின் தரம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அதனைத்தொடர்ந்து ஏற்றக்கோடு பகுதியில் சிறப்பு பகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் (20252026) ரூ.28.90 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அங்கன்வாடி மையம் கட்டுவதற்கான அடித்தளம் அமைக்கப்பட்டு, தற்போது பணிகள் நடைபெறவில்லை. அருகில் உள்ள நிலப்பிரச்சனையினை விரைந்து முடித்து, பணிகளை துவக்க வட்டாட்சியர் உள்ளிட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் .மு.பிரதாப், தெரிவித்தார். நடைபெற்ற ஆய்வுகளில் மாவட்ட விளையாட்டு அலுவலர் .வினு. திருவட்டார் வட்டாட்சியர் .மரகதவல்லி, வட்டார வளர்ச்சி அலுவலர், துறை அலுவலர்கள், ஆசிரியர்கள், மாணவ மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்..

# பணி நீக்க ஆணையை ரத்து செய்ய வலியுறுத்தி கூட்டுறவுத்துறை ஊழியர்கள் போராட்டம்!மதுரையில் மாவட்ட இணைப் பதிவாளர் அலுவலகம் முன்பு கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்




மதுரை, ஆக.5-

ராமநாதபுரம் மண்டல கூட்டுறவு சார்பதிவாளர் வேல்முருகன் மீதான பணி நீக்க ஆணையை ரத்து செய்ய வலியுறுத்தியும், பதிவாளரின் ஊழியர் விரோத போக்குகள் மற்றும் கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) தன்னிச்சையான நடவடிக்கையை கண்டித்தும், கூட்டுறவுத்துறை அமைச்சரின் கவனத்தை ஈர்க்கும் வகையில் தமிழ்நாடு அரசு கூட்டுறவுத்துறை ஊழியர் சங்கம் சார்பில் மதுரை பழங்காநத்தம் மாவட்ட இணைப் பதிவாளர் அலுவலகம் முன்பு கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு கூட்டுறவுத்துறை ஊழியர் சங்கத் தலைவர் தாமோதர ராவ் தலைமை வகித்தார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் தமிழ், மாவட்டப் பொருளாளர் பரமசிவம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழ்நாடு அரசு கூட்டுறவுத்துறை ஊழியர் சங்க மாநில நிர்வாகி ஆசிக் ரசூல் கோரிக்கைகளை விளக்கி உரையாற்றினார்.மேலும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க தெற்கு வட்டக் கிளைத் தலைவர் பஞ்சவர்ணம், கிளைச் செயலாளர் பிரேமலதா, மேற்கு வட்டக் கிளைச் செயலாளர் ராஜா, தெற்கு வட்ட துணைத் தலைவர் மகுடீஸ்வரன், கூட்டுறவுத்துறை ஊழியர் சங்க மாநில செயற்குழு உறுப்பினர் அழகர்சாமி உள்ளிட்ட ஏராளமான கூட்டுறவுத்துறை ஊழியர்கள் பங்கேற்றனர். ஆர்ப்பாட்டத்தில், வேல்முருகன் மீதான பணி நீக்க ஆணையை உடனடியாக ரத்து செய்ய வேண்டும், அனைத்து பணிகளுக்கும் புதிய அவகாசம் வழங்கி பணியாற்ற உத்தரவிட வேண்டும், கண்காணிக்க தவறினார் என்ற காரணத்தால் இனி நடவடிக்கை எடுக்கக் கூடாது, அனைத்து நிலைகளிலும் பதவி உயர்வு வழங்க அரசாணை பிறப்பிக்க வேண்டும், ஓராண்டாகியும் பணி ஆணை வழங்கப்படாத மூன்று துணைப் பதிவாளர்களுக்கு உடனடியாக பணியமர்வு ஆணை வழங்க வேண்டும், நிறுத்தி வைக்கப்பட்டுள்ள அனைத்து பொதுப்பணியிட மாறுதல்களையும் அமல்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஊழியர்கள் கண்டன கோஷங்களை எழுப்பினர்.இறுதியில், மாவட்டப் பொருளாளர் குறிஞ்சி இளவரசன் நன்றியுரை கூறினார்.






# மாநில அளவிலான 2வது யோகா சாம்பியன்ஷிப் போட்டிகாரைக்குடியில் சிறப்பாக நடைபெற்றது

## வெற்றி பெற்ற மாணவர்களுக்கு டாக்டர் M. குமரேசன் பரிசு வழங்கினார்



காரைக்குடி, ஆக.5-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் தமிழ்நாடு யோகா பெடரேஷன் மற்றும் சாய் மகிழ் யோகா சென்டர் இணைந்து நடத்திய இரண்டாவது ஆண்டு மாநில அளவிலான யோகா சாம்பியன்ஷிப் போட்டி, காரைக்குடி ஏ.எம். ஜோதிமணி சன் மஹாலில் சிறப்பாக நடைபெற்றது.போட்டியை முன்னாள் காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் எஸ். மாங்குடி மற்றும் காரைக்குடி ரோட்டரி சங்கத் தலைவர் ருக்மா சரவணன் ஆகியோர் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தனர். மாநிலம் முழுவதும் இருந்து 800க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பங்கேற்று பல்வேறு யோகா பிரிவுகளில் தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர். போட்டிகளில் சிறப்பிடம் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. சிறப்பு விருந்தினராக காரைக்குடி குளோபல் மிஷன் மருத்துவமனை தலைவர் டாக்டர் வி. குமரேசன் கலந்து கொண்டு, வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கி பாராட்டினார்.நிகழ்ச்சியில் தமிழ்நாடு யோகா பெடரேஷன் மாநிலச் செயலாளர் பரணிதரன், மாவட்டச் செயலாளர் யோகா ஆச்சாரியார் பூ. புவனேஷ், சாய் மகிழ் அகாடமி நிறுவனர் எம். சுருதி, முனைவர் சுதாகர், ஓவிய ஆசிரியர் கணேசன் மற்றும் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் சிவகங்கை மாவட்டத் தலைவர் பூ. சிவனேஷ் பூசைத்துரை உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

# அழகப்பா பல்கலைக்கழக கல்வியியல் கல்லூரியில் 1981-82 பழைய மாணவர்கள் மீள்சந்திப்பு விழா




காரைக்குடி, ஆக.5-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் உள்ள அழகப்பா பல்கலைக்கழக கல்வியியல் கல்லூரியில், 1981ஸ்ரீ82 கல்வியாண்டு பழைய மாணவர்களின் மீள்சந்திப்பு விழா கல்லூரி முதல்வர் முனைவர் ஜெ.இ. மெர்லின் சசிகலா தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.இந்த விழாவில், 1981ஸ்ரீ82 கல்வியாண்டைச் சேர்ந்த 25க்கும் மேற்பட்ட பழைய மாணவர்கள் கலந்து கொண்டு, பல ஆண்டுகளுக்குப் பிறகு சந்தித்த மகிழ்ச்சியில் தங்களது கல்லூரி கால நினைவுகளையும், பணியனுபவங்களையும் பகிர்ந்து கொண்டனர். நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, பழைய மாணவர்கள் கல்லூரிக்குத் தேவையான கல்வி மற்றும் பயன்பாட்டுப் பொருட்களையும், நூலக வளர்ச்சிக்காக மதிப்புமிக்க நூல்களையும் அன்பளிப்பாக வழங்கினர்.தொடர்ந்து நடைபெற்ற சிறப்பு அமர்வில், தற்போது கல்வியியல் பயிலும் ஆசிரியர் பயிற்சி மாணவர்களிடம் பழைய மாணவர்கள் உரையாற்றினர். ஆசிரியர் பணியின் சிறப்பு, சமூகப் பொறுப்பு, கல்வியின் மாற்றாற்றல் மற்றும் தங்களது பணியனுபவங்களை பகிர்ந்து, சிறந்த ஆசிரியர்களாக உருவாக வேண்டிய வழிமுறைகளை எடுத்துரைத்தனர். விழாவின் நிறைவாக, 1981ஸ்ரீ82 கல்வியாண்டின் நினைவுகளைப் பதிவு செய்த சிறப்பு நினைவு மலர் (ஆல்பம்) வெளியிடப்பட்டது.

இந்நிகழ்ச்சியை .லாரன்ஸ், முருகன், முத்துக்கிருஷ்ணன், ஜான்சன் மற்றும் ராக்கப்பன் ஆகியோர் ஒருங்கிணைப்பாளர்களாக இருந்து சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.பழைய மாணவர்களுக்கும், தற்போதைய ஆசிரியர் பயிற்சி மாணவர்களுக்கும் இடையே அனுபவப் பகிர்வை ஏற்படுத்திய இம்மீள்சந்திப்பு விழா, கல்வி நிறுவன வளர்ச்சியில் பழைய மாணவர்களின் பங்களிப்பையும், தலைமுறைகளை இணைக்கும் கல்வி உறவின் மகத்துவத்தையும் வெளிப்படுத்தும் வகையில் சிறப்பாக அமைந்தது.




# வீர தீரன் சின்னமலை நினைவு தினம்: திருப்பூரில் மலர்தூவி மரியாதை

திருப்பூர், ஆக.5-

திருப்பூர் மாவட்டம் காங்கேயம் வட்டம் மேலப்பாளையம் சமூகநலக் கூடத்தில் நடைபெற்ற வீர தீரன் சின்னமலை அவர்களின் நினைவு தின நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் டாக்டர் ம. லட்சுமி நாராயணன், கலந்து கொண்டு, அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் கா. கார்த்திகேயன், காங்கேயம் சட்டமன்ற உறுப்பினர் எஸ். என். நடராஜன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மௌகஸ் ராஜா உள்ளிட்ட அரசு அலுவலர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டு வீர தீரன் சின்னமலையின் தியாகப் பணியை நினைவுகூர்ந்தனர்.



■ நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில் சுதந்திர தின விழா முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிருந்தா உட்பட பலர் உள்ளனர்.



# மாநகராட்சி சாலை, ரோயப்பல் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட புதிய பாலத்தில் வாகன விழிப்புணர்வு பேரணி

திருப்பூர், ஆக.5-

திருப்பூர் மாநகராட்சி ரோயப்பல் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள புதிய பாலத்தை முன்னிட்டு, வாகன ஓட்டிகளுக்கான விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. ணஇந்நிகழ்ச்சியை தமிழக முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் அறிவுறுத்தலின்படி, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் ம. லட்சுமி நாராயணன், பச்சைக்கொடி அசைத்து தொடங்கி வைத்தார்.நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் டாக்டர் ம. லட்சுமி நாராயணன், மாநகராட்சி ஆணையாளர் எம். அறிவ், தலைமையிடப் பொறியாளர் முகமது சபியுல்லா உள்ளிட்ட அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




■ கன்னியாகுமரி நகராட்சிக்குட்பட்ட சின்ன முட்டம் புனித தோமையார் தொடக்கப்பள்ளி மைதானத்தில் தூய்மை இந்தியா நகரினை பசுமையாக்குதல் திட்டத்தின் மூலம் நகராட்சி தலைவர் குமரி ஸ்டீபன், நகராட்சி ஆணையாளர் பட்டுசாமி ஆகியோர் மரம் நட்டுவித்து தொடங்கி வைத்தனர். இந்த நிகழ்ச்சியில் நகர்மன்ற உறுப்பினர் ராயப்பன், நகராட்சி பொறியாளர் முருகன், நகரமைப்பு ஆய்வாளர் ஷேக்அப்துல்காதர், சுகாதார ஆய்வாளர் ஜெகதீஸ்வரி, சுகாதார மேற்பார்வையாளர் பிரதீஷ், கழக நிர்வாகிகள் சின்னமுட்டம் ராஜ், ரூபின், ஷ்யாம், டெங்கு பணியாளர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் கலந்து கொண்டு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்




Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161